# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர்: G. ராஜா 9842364068 இணைஆசிரியர்: R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:164 ★15.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:164 ★15.10.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai






அரக்கோணம் ஸ்ரீ அனுகிரஹா மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில்

## சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் 150 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை கூட்டுறவுத்துறை அமைச்சர் வ.காந்திராஜ் வழங்கினார்

கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் 150 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்கள் இன்று இன்று (14.10.2026) அரக்கோணம் ஸ்ரீ அனுகிரஹா மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியினை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து, 150 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

தொடர்ந்து. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் வைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதித.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லார்க்கும் எல்லாம் என்கிற கொள்கையின் அடிப்படையில் மக்களாட்சி நடத்தி வருகின்றார். அதனடிப்படையில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இத்தனை தங்கைகளுக்கு ஒன்றாகசமுதாயவளைகாப்புநடத்தும் நிகழ்ச்சியில்கலந்துகொள்வதுஎனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும். புத்துயிர் வழங்கக்கூடிய ஒரு ஆட்சியாக திகழ்கிறது.

கர்ப்பிணி தாய்மார்கள் மருத்துவர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளின்படி நடந்து கொள்ள வேண்டும். தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அனைத்துவித வசதிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி தந்திருக்கின்றார். ஆகவே கர்ப்பிணி தாய்மார்கள் தனியார் மருத்துவமனைக்கு செல்லாமல் அரசு மருத்துவமனைகளில் சென்று உங்களின் பிரசவங்களை பார்த்துக் கொள்ளுங்கள். தாய் மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் உங்களின்

குழந்தைகளுக்கு நான் உங்களின் அண்ணணாக வந்து தங்க மோதிரம் வழங்குவேன் என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் மகப்பேற்றின் முக்கியத்துவம் குறித்தும். கர்ப்பகால, பிரசவகால பராமரிப்புகுறித்தும்கர்ப்பிணிகளுக்கு ஆலோசனை வழங்கினர். குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் வழங்குதல், முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே வழங்குதல் மற்றும் ஆறு மாதங்களுக்குப்பிறகுதாய்ப்பாலுடன் இணை உணவு வழங்குதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

கர்ப்பிணித்தாய்மார்களின்நலனைப் பாதுகாக்கும் வகையில், கர்ப்பகாலத்தில் சத்தான மற்றும் சரிவிகிதஉணவுகளைஉட்கொள்வதன் அவசியம். இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமில மாத்திரைகளை முறையாக உட்கொள்ளுதல். கர்ப்பகால மருத்துவப் பரிசோதனைகளைத் தவறாமல் மேற்கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பான மகப்பேற்றின் முக்கியத்துவம் குறித்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் சார்பாக விழிப்புணர்வு கண்காட்சி அமைக்கப்பட்டது. தாய் மற்றும் சேய் நலனைப் பாதுகாத்து. ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்கும் நோக்கில் நடைபெறும் இச்சமுதாய வளைகாப்பு விழா, கர்ப்பிணித் தாய்மார்களிடையே ஊட்டச்சத்து மற்றும் தாய் சேய் நலம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் அமைந்தது. நிறைவாக, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் கர்ப்பிணி தாய்மார்களுடன் அமர்ந்து ணவருந்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் செல்வி.மு.சாந்தி பிரியதரிசினி வட்டார மருத்துவ அலுவலர் மரு.மேகலா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. கிரிஜா மற்றும் வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள். மேற்பார்வையாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள்பலர்கலந்துகொண்டனர்.

# அனைத்து பருவகாலங்களிலும் தடையின்றி குடிநீர் வழங்கும் வகையில் ரூ.3,108 கோடியில் சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டம்: முதல்வர் விஜய் அடிக்கல் நாட்டினார்




அனைத்து பருவகாலங்களிலும் மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கும் வகையில் ரூ.3,108 கோடியே 55 லட்சம் மதிப்பீட்டில், சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டப் பணிகளுக்கு முதல்வர் விஜய் அடிக்கல் நாட்டினார். சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் வாயிலாக, சென்னையில் உள்ள சுமார் 91 லட்சம் மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்திசெய்யும் வகையில், சென்னைக்கு முக்கிய நீர் ஆதாரங்களாக விளங்கும் புழல் ஏரி, சோழவரம் ஏரி, வீராணம் ஏரி,

செம்பரம்பாக்கம் ஏரி, கிருஷ்ணா நதி நீர், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை மற்றும் பூண்டி நீர்த்தேக்கங்களின்மூலம்நீர்பெறப்பட்டு, புழல், சூரப்பட்டு, கீழ்ப்பாக்கம், செம்பரம்பாக்கம்மற்றும்வீராணம்ஆகிய 5 இடங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மீஞ்சூரில் உள்ள கடல்நீரை குடிநீராக மாற்றும் நிலையம் மற்றும்நெம்மேலியில்உள்ள2கடல்நீரை குடிநீராக மாற்றும் நிலையங்கள் என மொத்தம் 3 நிலையங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகளின் வாயிலாக 143 குடிநீர் பகிர்மான நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு 1,260 எம்எல்டி பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் சென்னை மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது ஒவ்வொரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்தும், சென்னை மாநகரின் குறிப்பிட்ட பகுதிகளுக்குபிரதானகுழாய்கள்மூலமாக குடிநீர் வழங்கும் வகையில் கட்டமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஏதேனும் ஒருகுடிநீர்ஆதாரத்தின்குடிநீர்வழங்கலில் எதிர்பாராத காரணங்களால் தடை ஏற்படும்போது, பாதிக்கப்படும் பகுதிகளுக்கு மாற்று வழிகளில் குடிநீர் வழங்குவதற்கான கட்டமைப்புகள் தற்போது ஏதும் இல்லாத நிலை உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் வாயிலாக ரூ.3,108கோடியே55லட்சம்மதிப்பீட்டில் சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டப் பணிகளுக்கு முதல்வர் விஜய் நேற்று சென்னை, சோழிங்கநல்லூரில் உள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீரேற்றும் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம், 'சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டம்' வாயிலாக, 5 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 3 கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் தற்போது பேரூரில் அமைக்கப்பட்டு வரும் 400 எம்எல்டி கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் என மொத்தம் 9 சுத்திகரிப்பு நிலையங்களையும் ஒன்றிணைத்து, சென்னை மாநகரில் உள்ள அனைத்துக் குடிநீர் பகிர்மான நிலையங்களுக்கும்தேவைக்கேற்பசீரான அளவில் குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

இத்திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும். 91.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுற்றுக்குழாய்கள், 64.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பரிமாற்ற குழாய்கள் மற்றும் 2.65 கிலோ மீட்டர் நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் அதனை சார்ந்த கட்டுமான பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன்மூலமாக, சென்னையில் அனைத்து பருவகாலங்களிலும்மக்களுக்குகுடிநீரை எவ்விதத் தடையுமின்றி வழங்கும் வகையில், அனைத்து குடிநீர் பகிர்மான நிலையங்களுக்கும் தேவைக்கேற்ப குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, வெங்கடரமணன், ராஜ்மோகன், மரியவில்சன், குமார், எம்எல்ஏக்கள் சரவணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆனந்த், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் சமீரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் சுகபுத்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சம்பா மற்றும் தாளடி சாகுபடியை இழந்து தவிக்கும் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்? டிடிவி தினகரன்

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவு: மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் தேதி திறக்கப்பட வேண்டிய தண்ணீர் உரிய நேரத்தில் திறக்கப்படாத காரணத்தால் குறுவை சாகுபடி பொய்த்து போன நிலையில், தற்போது நிலவும் கடுமையான வறட்சியால் சம்பா மற்றும் தாளடி சாகுபடியோடு தங்களின் வாழ்வாதாரத்தையும் இழந்திருக்கும் விவசாய பெருமக்கள் செய்வதறியாது திகைத்துள்ளனர்.

தங்களது சொந்த செலவில் பம்பு செட்டுகளைஅமைத்துநிலத்தடி நீரின் மூலம் விவசாயம் செய்த விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்காமல் வஞ்சித்த அரசால் விதைத்தவர்களின் கண்முன்னே பயிர்கள் கருகும் அளவிற்கான சூழல் உருவாகியுள்ளது.



முதல்வர் விஜய், தவெக அரசின் கையாலாகாத் தனத்தால் சம்பா மற்றும் தாளடி சாகுபடியை இழந்து தவிக்கும் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்? எனவே, வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் விவசாயிகள் பெற்ற கடன் முழுவதையும் உடனடியாக தள்ளுபடி செய்திடுவதோடு, காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்தமாவட்டங்களாக அறிவித்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கிட வேண்டும்.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் 1.6 லட்சம் பேர் ஈடுபடுவர்

தமிழ்நாடு அரசு நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் 1.6 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை மேற்கொள்கின்றனர். 38 மாவட்டங்கள், 15,437 கிராமங்கள் மற்றும் 651 நகரங்களில் கணக்கெடுப்பு நடைபெறும். எனவே பொதுமக்கள் முழுமையான தகவல்களை வழங்கவும், சுய கணக்கெடுப்பு முறையைப் பயன்படுத்தவும்அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மாநிலம் முழுவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு2027ன்ஒருகட்டப்பணியை, சுமார் 1,41,083 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் 20,467 மேற்பார்வையாளர்கள் என மொத்தம் 1.61 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மேற்கொள்வார்கள். மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முழுமையையும் துல்லியத்தையும் உறுதி செய்வதில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு பொதுமக்கள் கணக்கெடுப்பாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட கேள்வித்தாளின்கீழ்கோரப்பட்டஅனைத்து தகவல்களையும் வழங்க வேண்டும்.

குடும்பங்கள், அதற்கென ஒதுக்கப்பட்ட இணையதளத்தைப் பயன்படுத்தி சுய கணக்கெடுப்பு வசதி மூலம் தங்கள் தகவல்களை வழங்கும் வாய்ப்பையும் பெறுவார்கள். சுய கணக்கெடுப்பிற்கான தேதிகள் ஜனவரி 2027ல் அறிவிக்கப்படும். செயல்முறை மற்றும் இணையதளத்தை அணுகுவது குறித்த விவரங்கள் அதிகாரப்பூர்வ வழிகள் மூலம் அறிவிக்கப்படும். தமிழகம் முழுவதும் மக்கள் இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பங்கேற்று, கணக்கெடுப்புப் பணியாளர்களுக்குத் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அரசு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப.,அவர்கள் சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் இன்று (14.10.2026) சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் கூடலூர் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ஊராட்சி அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்பின் கீழ் செயல்படும் அம்மன் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர் திருமதி.வள்ளியம்மா க/பெ மணிகண்டன் என்பவருக்கு ரூ.70000/ மற்றும் வங்கி குழு கடன் ரூ.115000/வழங்கியதன்மூலம்அவர்கள் நெசவு தொழில் (புடவை ) செய்து வருவதையும், அவ்வூராட்சியில் வாகை மகளிர் குழுவின் உறுப்பினர் திருமதி. சகுந்தலா க/பெ ராமச்சந்திரன் என்பவர் ரூ.40000 வீதம் ரூ.240000/கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் மீதமுள்ள உறுப்பினர்களான திருமதி. சாந்தி என்பவருக்கு ரூ.50000, திருமதி. பாணு என்பவருக்கு ரூ.50000. திருமதி. அனிதா என்பவருக்கு ரூ.50000, திருமதி. உமா என்பவருக்கு ரூ.50000. என்பவருக்கு ரூ.50000. திருமதி.வள்ளி என்பவருக்கு ரூ.50000. திருமதி.திலகா திருமதி.அமுதா என்பவருக்கு ரூ.30000, திருமதி. லட்சமி என்பவருக்கு ரூ.50000. திருமதி.லதா என்பவருக்கு ரூ.50000, திருமதி. ஜோதி என்பவருக்கு ரூ.50000. திருமதி.தாயார்என்பவருக்குஇரண்டாம் தவணையாக ரூ.50000 ஆக ரூ.530000/ வழங்கப்பட்டு லுங்கி உற்பத்தி செய்து வாழ்வாதாரமேம்பாடுஅடைந்துள்ளனர். மின்னல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர்அதற்குஉறுதுணையாக இருந்தனர்.

தொழில் விவரங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டார். மேலும் தொழில் செய்யும் மினி கிளஸ்டர் உறுப்பினர்களிடம் தொழிலுக்கான முதலீட்டு விவரம், பணியாளர்கள்



சமுதாயமுதலீட்டுநிதிரூ.50000/மற்றும் வங்கி குழு கடனில் ரூ.815000/ வழங்கி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து நடத்தி வருவதை கள ஆய்வு மேற்கொண்டு. தொழில் நிலவரம் குறித்து கேட்டறிந்தார்கள். அவர்களின் தொழில் மேம்பாட்டிற்கு உதவியாக plf& Shg இருந்தனர் என பெண்கள் தெரிவித்தனர். மேலும் தொழில் செய்யும் மகளிர்சுய உதவி குழு உறுப்பினர்களிடம் தொழிலுக்கான முதலீட்டு விவரம். பணியாளர்கள் விவரம். விற்பனை நிலவரம், லாபம் விவரம் போன்ற விவரங்களை விசாரித்தார் விற்பனை மேம்பாட்டிற்கான அறிவுரைகளை வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ஒன்றியம் மின்னல் ஊராட்சியில் லுங்கி உற்பத்தி செய்யும் 30 உறுப்பினர்களைக் கொண்ட மினி கிளஸ்டர் (Mini Cluster) துவங்கப்பட்டு 20252026 ஆம் ஆண்டிற்கான நிதி ரூ.250000/பெறப்பட்டது. முதல் கடனுதவியாக அப்பகுதியில் லுங்கி தயாரிப்பு செய்ய ஒரு உறுப்பினருக்கு திருமதி. வேதவள்ளிஎன்பவருக்கு ரூ.40000, திருமதி. திலகம் என்பவருக்கு ரூ.40000, திருமதி. லட்சுமிஎன்பவருக்கு ரூ. 40000, திருமதி.தாயார் என்பவருக்கு ரூ.40000. திருமதி.ரேவதி என்பவருக்கு ரூ.40000, திருமதி. உமா என்பவருக்கு விவரம், விற்பனை நிலவரம், லாபம் போன்ற விவரங்களை விசாரித்தார். விற்பனை மேம்பாட்டிற்கான அறிவுரைகள் வழங்கினார்.

தொடர்ந்து, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மின்னல் ஊராட்சியில் மாற்றுத்திறனாளிகள் சுய உதவிக் குழுக்கள் மூலமாக வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி கூடத்தில் மாற்றுத்திறனாளி பெண்கள் LED பல்பு உற்பத்தி செய்து வருவதை கள ஆய்வு மேற்கொண்டு. உற்பத்தி மற்றும் விற்பனை நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மின்னல் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளுடன் கலந்துரையாடினார். பின்னர், மின்னல் (கிழக்கு) ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு. மாணாக்கர்களுடன் கற்றல் அறிவுத் திறன் குறித்து கலந்துரையாடினார். பள்ளி வகுப்பறைகள், பள்ளி வளாகம், கழிவறை உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளில் உதவி திட்ட அலுவலர் (MF&FI&LHI/C) திரு. அருண்குமார். ஊராட்சி மன்ற தலைவர் திரு.கோபி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# வாரந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில்14.10.2026 தேதி வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்திரு.பே.சிபின்,இ.கா.ப.,அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 35மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்.

கொடைக்கானல் கீழ் மலை ஊராட்சியி ல் உள்ள பெரியோர் ஊராட்சியில் பொதும க்களுக்காக இரண்டு போர்வலுக்கு ஊராட்சி நிர்வாக த்தால் அனுமதி வழங்க ப்பட்டு இர ண்டு போர்வெல்கள் கடந்த பத்து நாட்க ளுக்கு போடப்பட்ட நிலையில்

கடந்த பத்து நாட்களுக்கு மேலாக மலைகளை உடைக்கும் போர்வெல் இயந்திரத்தை அரசு அதிகாரிகள் கீழே இறக்கச் சொல்லியும் மலையை விட்டு இறக்காமல் பள்ளத்து கால்வாய் பகுதியில் வைத்து இரவு நேரங்களில் முறைகேட்டில்




ஈடுபட்டுவருவதாகவருவாய்த்துறைஅதிகாரிகள் காவல் நிலையத்தில் புகார்

உடனடியாகமலையைஉடைக்கும்போர்வெல் இயந்திரத்தை இறக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

# கொடைக்கானல் பெரியகுளம் அடுக்கம் மலைச்சாலையில் 100அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து விபத்தில் காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் அனுமதி



திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து தரைத்தளப்பகுதிக்கு செல்வதற்கு வத்தலகுண்டு பழனிமற்றும் அடுக்கம் சாலைகள் அமைந்துள்ளது

இதில் பெரும்பாலானோர் அடுக்கம் மலைச்சாலையில் பயன்படுத்துவது வழக்கமான ஒன்றாகும் இந்த நிலையில் கொடைக்கானலை சேர்ந்த சலீம்தனது குடும்பத்தினருடன் பெரிய குளத்தில் இருந்து அடுக்கம் மலை பாதை வழியாககொடைக்கானலை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது கொடைக்கானலில் இருந்து பெரியகுளம் நோக்கி சென்ற வாகனத்திற்கு வழி விடும்போது எதிர்பாராத விதமாக இனோவா கார் சுமார் 150 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இந்த விபத்தில் வாகனத்தில் பயணம் செய்தவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டது உடன் அருகில் இருந்தவர்கள் விபத்தில் காயமம் அடைந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர்

மேலும் அடுக்கம் மலைச்சாலையில் முறையான தடுப்புசுவர்கள்இல்லாதகாரணத்தாலும்சாலைகளில் இருபுறமும்முற்சொடிசூழ்ந்துகாணப்படுவதால்இந்த விபத்து ஏற்பட்டது என்பது தெரிய வருகிறது எனவே நெடுஞ்சாலைதுறையினர்இந்தபகுதியில்முறையான தடுப்பு வேலிகளைஅமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர்




தமிழ்நாடுவிளையாட்டுமேம்பாட்டு ஆணையம், இராணிப்பேட்டை மாவட்டப் பிரிவின் சார்பில், மாநில அளவிலான முதலமை ச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் இராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து, மாவட்ட வருவாய்அலுவலர்திரு.ந.சரவணன், B.L., அவர்கள் அரசுப் பேருந்துகள் மூலம் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.உடன் இராணிப்பேட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ச. ஞானசேகரன் உடன் இருந்தார்

மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக, இராணிப்பேட்டை மாவட்டத்திலிருந்து கீழ்க்கண்ட விளையாட்டுப் பிரிவுகளில் மொத்தம் ★140 வீரர், வீராங்கனைகள்★ புறப்பட்டுச் சென்றுள்ளனர். சென்னை – ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் கையுந்துபந்து, மட்டைப்பந்து மற்றும் கால்பந்து – 78 வீரர், வீராங்கனைகள்.செங்கல்ப ட்டு – தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் இறகுப்பந்து– 6வீரர், வீராங்கனைகள். கோயம்புத்தூர் – மாவட்ட விளையாட்டரங்கம் கூடைப்பந்து – 26 வீரர், வீராங்கனைகள்.திண்டுக்கல் – மாவட்ட விளையாட்டரங்கம் கபாடி – 12 வீரர், வீராங்கனைகள். நாமக்கல் – மாவட்ட விளையாட்டரங்கம் கால்பந்து – 18 வீரர், வீராங்கனைகள். மேலும், வீரர், வீராங்கனைகளின் பயணத்தின்போது அவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில், காலைச் சிற்றுண்டி, பிஸ்கெட் மற்றும் குடிநீர் ஆகியவை ஏற்பாடு செய்து வழங்கப்பட்டு, போட்டிகளில் பங்கேற்க வழியனுப்பி வைக்கப்பட்டனர் .

# வழுதலங்குணம் ஊராட்சியில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம்: மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கிய ரூ.56.46 லட்சம் நலத்திட்ட உதவிகள்; 219 பயனாளிகள் பயன்பெற்றனர்

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டத்திற்குட்பட்ட வழுதலங்குணம் ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில், 219 பயனாளிகளுக்கு ரூ.56 லட்சத்து 46 ஆயிரத்து 983 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார். இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து 43 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட அவர், அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் மாவட்ட ஆட்சியர் பேசுகையில், மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தவிர்க்க, கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பருவமழை தொடங்கும் வரை குடிநீரை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். குடிநீர் தொடர்பான குறைகள் இருந்தால் உள்ளாட்சி அமைப்புகளிடம் தெரிவிக்கலாம். பொதுமக்களின் கோரிக்கைகளுக்குத்தீர்வுகாணமாவட்ட நிர்வாகமும் உள்ளாட்சி அமைப்புகளும் உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன என்றார்.

மேலும், 14 வயது நிறைவடைந்த பெண் குழந்தைகளுக்கு கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும் எச்பிவி தடுப்பூசி செலுத்துவது அவசியம். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளிகளில் இந்தத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. பெண் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, பெற்றோர்கள் அலட்சியம் காட்டாமல்தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வரவேண்டும்எனஅறிவுறுத்தினார். மாவட்டம் முழுவதும் பெண்களுக்காக நடத்தப்படும் மார்பகப் புற்றுநோய் சிறப்பு மருத்துவ முகாம்களிலும் பெண்கள் பங்கேற்று பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொண்டு பயன்பெறும் வகையில், துறைவாரியாக அமைக்கப்பட்டிருந்த திட்ட விளக்கக் கண்காட்சிகளைப் பார்வையிடுமாறும் தெரிவித்தார்.

இம்முகாமிற்கு கீழ்பென்னாத்தூர் சட்டமன்றஉறுப்பினர்எஸ்.ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். பல்வேறு துறைகளின் சார்பில் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

வருவாய்த்துறை சார்பில் 88 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா ஆணைகள், 31 பேருக்குப் பட்டா மாறுதல் ஆணைகள், 18 பேருக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் ஆணைகள், 7 பேருக்குப் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்கள் மற்றும் 15 பயனாளிகளுக்குப் பல்வேறு சான்றிதழ்கள்வழங்கப்பட்டன.மேலும், இயற்கை மரண உதவித்தொகை, திருமண உதவித்தொகை, குடும்ப அட்டைகள், நலிவுற்றோருக்கான நிதியுதவிஉள்ளிட்டபல்வேறுநலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

தோட்டக்கலைத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு மழைத்தூவான், சொட்டுநீர்ப் பாசனம், நிரந்தரப் பந்தல் மற்றும் காய்கறி விதைகள் உள்ளிட்ட



உதவிகளும், வேளாண்மைத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு உளுந்து சாகுபடித் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 5 கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த திட்ட விளக்கக் கண்காட்சிகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறையின்நடமாடும் எக்ஸ்ரே மருத்துவ வாகனத்தையும் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்பு) இளவரசன், வேளாண்மை இணை இயக்குநர் பொறுப்பு தி. மலர்விழி, பழங்குடியினர் நலத் திட்ட அலுவலர் செல்வகுமார், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் அன்பரசி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், மாவட்ட சுகாதார அலுவலர் வெங்கட்ரமணன், கீழ்பென்னாத்தூர்வட்டாட்சியர்இந்திரா உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆவடி காவல் ஆணையரகத்தில் புலன் விசாரணை பற்றிய பயிற்சி

ஆவடி காவல் ஆணையரகத்தில் புதிய முப்பெரும்குற்றவியல்சட்டங்களின்படி புலன் விசாரணை மேற்கொள்வது தொடர்பாக, eSakshya மற்றும் eSummons ஆகியவற்றைப்பயன்படுத்துவது குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பினை ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் தொடங்கி வைத்தார். மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் காவல்துறைத் தலைவர் சோனல் சந்திரா, காவல் கண்காணிப்பாளர்லாவண்யாஆகியோர் பயிற்சி அளித்தனர்.




இப்பயிற்சியில், eSummons மூலம் மின்னணு முறையில் அழைப்பாணை களை அனுப்புதல் மற்றும் சார்வு செய்தல், eSakshya செயலி மூலம் குற்ற நிகழ்விடத்தில் மின்னணு ஆதாரங்களைப் பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல், சாட்சியங்களைச் சேகரித்தல், புலன் விசாரணையை முறையாக மேற்கொள்ளுதல் மற்றும் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் உள்ளிட்ட நடைமுறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், InterOperable Criminal Justice System (ICJS) வசதிகளைப் பயன்படுத்தி சந்தேக நபர்கள் மற்றும் குற்றவாளிகளின் விவரங்களைச் சேகரிப்பது, புதிய முப்பெரும் குற்றவியல் சட்டங்களின்படி புலன் விசாரணையை மேற்கொள்வது மற்றும் மின்னணு ஆதாரங்களைச் சட்ட நடைமுறைகளின்படி கையாள்வது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில், ஆவடி காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர். சிவக்குமார், காவல் துணை ஆணையாளர், தலைமையிடம் & நிர்வாகம், ஆவடி காவல் ஆணையரக சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து துணை ஆணையாளர்கள், காவல் உதவி ஆணையாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் அரக்கோணம் ஸ்ரீ அனுகிரஹா மஹாலில்சமுதாயவளைகாப்புநிகழ்ச்சியில்மருத்துவம்மற்றும்மக்கள்நல்வாழ்வுத் துறையின் சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் 64 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் சரவணகுமார். மாவட்ட சுகாதார அலுவலர் செந்தில்குமார், வருவாய் கோட்டாட்சியர் ரமேஷ், வட்டார மருத்துவ அலுவலர் மேகலா, மாவட்ட தொற்று நோயியல் வல்லுநர் விஜயகுமார், வட்டாட்சியர் வரலட்சுமி மற்றும் பலர் உள்ளனர்.

# கொட்டும் மழையிலும் கொந்தளித்த பா.ஜ.க.! காங்கிரஸ் எம்.பி.யை கைது செய்யக்கோரி திருவண்ணாமலையில் கண்டன ஆர்ப்பாட்டம்

மணிப்பூர் மாநில காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அங்கோம்சா பிமோல் அகோய்ஜாம் மீது முன்வைக்கப்பட்டுள்ள பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளைக் கண்டித்து, அவரைக் கைது செய்ய வலியுறுத்தி திருவண்ணாமலையில் பா.ஜ.க.வினர் கொட்டும் மழையிலும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை அண்ணா சிலை அருகில் பா.ஜ.க. தெற்கு மாவட்டம் மற்றும் மாவட்ட மகளிரணி சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட மகளிரணித் தலைவி கீர்த்தி செல்வமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் கே. ரமேஷ் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில், பெண் மாணவிகளுக்குப் பாலியல் துன்புறுத்தல் அளித்ததாகக் கூறப்படும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது உரிய விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவரைக் கைது செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.




ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது திருவண்ணாமலையில் பலத்த மழை பெய்தது. இருப்பினும், மழையையும் பொருட்படுத்தாமல் பா.ஜ.க.வினர் குடைகளைப் பிடித்தபடி தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொட்டும் மழையிலும் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்து, குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம், மாவட்டப் பொதுச்செயலாளர்கள் ஜெய்நாத், ரமேஷ், கவிதா, மாவட்டத் துணைத் தலைவர்கள் சேகர், கிருஷ்ணமூர்த்தி, மாவட்டச் செயலாளர்கள் சஞ்சீவி, பழனி, சுந்தரமூர்த்தி, மாநிலக் கூட்டுறவுப் பிரிவுச் செயலாளர் அறவாழி, மாவட்டப் பொருளாளர் சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், மண்டலத் தலைவர்கள் சந்தோஷ், பரமசிவம், வேலு, அசோகன், மண்டலப் பொறுப்பாளர்கள் ராஜசேகர், ஜே. முருகன், மாவட்டத் தரவு மேலாண்மைப் பிரிவுத் தலைவர் சதீஷ்குமார், மாவட்ட ஊடகப் பிரிவுத் தலைவர் பூபதி, மாவட்ட சமூக ஊடகப் பிரிவுத் தலைவர் சிவசுப்பிரமணியம், மாவட்டக் கூட்டுறவுப் பிரிவுத் தலைவர் சிவக்குமார், மாவட்ட ஊரக உள்ளாட்சிப் பிரிவுத் தலைவர் சீனிவாசன், மாவட்டப் பொருளாதாரப் பிரிவுத் தலைவர் பழனிவேல், மாவட்ட அமைப்புசாராப் பிரிவுத் தலைவர் வினோத் ஆகியோரும் பங்கேற்றனர்.

மாநகரத்துணைத்தலைவர்மாந்தோப்பு ராஜா, பிரச்சாரப் பிரிவைச் சேர்ந்த பச்சையப்பன், அலுவலகச் செயலாளர் பழனி, முன்னாள் மாவட்டச் செயலாளர் குமரன், முன்னாள் மாநிலச் செயற்குழு உறுப்பினர் ராஜதமயந்தி, முன்னாள் மாவட்டப் பொதுச்செயலாளர் முருகன், அரசு தொடர்புப் பிரிவைச் சேர்ந்த முருகன், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் முத்துக்குமார் மற்றும் மாவட்ட அலுவலக நிர்வாகிகள் மெட்டில்ராணி, மகேஸ்வரி உள்ளிட்ட மாவட்ட, மண்டல நிர்வாகிகள், அணிப் பிரிவுத் தலைவர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## பொறுப்பு ஏற்பு

திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளராக புகழேந்தி பொறுப்பேற்றுக் கொண்டார்

# செங்குன்றம் ஸ்ரீஅங்காளம்மன் திருக்கோயிலில் 4ஆம் நாள் நவராத்திரி திருவிழா

செங்குன்றம் மேட்டுத்தெருவில் அமைந்துள்ள ஸ்ரீஅங்காளம்மன் திருக்கோயிலில்நான்காம்நாள்நவராத்திரி திருவிழாவும் அதனைத் தொடர்ந்து 10 ஆம் நாள் 18ஆம் ஆண்டு மஹா சண்டி ஹோமம்நிகழ்ச்சியும்ஆலயநிர்வாகிகள், கிராம பொதுமக்கள், ஆலய மகளிர் குழுவினர்கள்ஏற்பாட்டில்மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது.



நவராத்திரி பூஜையின் நான்காம் நாள் சரஸ்வதி திருவுருவம் அலங்காரம் செய்யப்பட்டு, பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து, வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு. மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டு சிறப்பு பூஜைகளும் நடைபெற்றன.

நான்காம் நாள் உபயதாரர்களான KRM பாலசுந்தரம் பங்கஜம்மாள், சீனிவாசன் ஜெயந்தி, P.சேகர் சாந்தி, S.S, சிவா விஜயலட்சுமி, S.ரமேஷ் சசிகலா, S. ஜெயகோபி கல்யாணி, K, முரளிதாஸ் கோதை ஆகிய குடும்பத்தினரின் சார்பில் நான்காம் நாள் நவராத்திரி திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

உபயதாரர்களுக்கு ஆலய நிர்வாகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் செங்குன்றம் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஆலயம் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது.

முதல்படம்செய்தித்தாளின்டைட்டில். 2வது படம் செய்தியின் படமாக வைத்து ஒரிஜினல்படம்மாறாமல்டிசைன்செய்து தரவும்.



# த.வெ.க வில் இணைந்த மாற்று கட்சியினர்

நத்தம் பேரூராட்சி 16வது வார்டு அதிமுக கவுன்சிலர் விஜயவீரன், சமுத்திராப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சேது, தே.மு.தி.க நத்தம் தெற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் வெங்கடேஷ் ஆகியோர் திண்டுக்கல் தெற்கு மாவட்ட செயலாளர் நிர்மல்குமார் முன்னிலையில்தமிழகவெற்றிகழகத்தில்இணைந்தனர்.

இந்நிகழ்வில் நத்தம் நகர செயலாளர் யுவராஜ், நத்தம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜோதிராமன், நத்தம் மத்திய ஒன்றிய செயலாளர் சீதாராமன், த.வெ.க நிர்வாகிகள் சசிக்குமார், ஹரிஹரன், உலுப்பகுடி ராஜா உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# பட்டிவீரன்பட்டி அருகே வீட்டின் பூட்டை உடைத்து திருடிய வழக்கில் 5 பேர் கைது

திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையத்தை சேர்ந்த ராஜபாண்டி(40) என்பவரின் வீட்டின் பூட்டை மர்ம நபர்கள் உடைத்து 7 பவுன் தங்க நகை, 4 கிலோ வெள்ளி பொருட்கள், 2 குத்துவிளக்குகள்



5பட்டுப்புடவைகள் திருடியது தொடர்பாக பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து நிலக்கோட்டை டிஎஸ்பி இளஞ்செழியன் உத்தரவின் பேரில் பட்டிவீரன்பட்டி காவல் நிலைய ஆய்வாளர்முத்துக்குமரன்தலைமையில்சார்புஆய்வாளர் வாணி மற்றும்காவலர்கள்அப்பகுதிகளில்உள்ளசிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட கௌதம்(26), வீரசுரேந்தர்(21), முத்துகுமார்(21), விஜயகுமார்(24), பெத்தணன்(20), ஆகிய 5 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 1 கிலோ வெள்ளி பொருட்கள் 2குத்துவிளக்குகள்4 பட்டு புடவைகள் ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# கடலூர் சிப்காட் விரிவாக்கத்திற்கு எதிராக ஊர் பொதுமக்கள், மாணவர்கள் போராட்டம்

கடலூர் சிப்காட் விரிவாக்கத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் என 100க்கணக்கானோர் கண்டன பேரணி நடத்தினர்.

கடலூர் மாவட்டம் தியாகவல்லி, நொச்சிக்காடு மட்டும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் சிப்காட் தொழில்பேட்டை விரிவிக்கப் பணிகளுக்காக விவசாயிகளின் விளைநிலங்களை கையகப்படுத்தும் முயற்சி தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

தங்களின் வாழ்வாதாரமான விவசாய நிலங்களை, அரசு கையகப்படுத்துவதற்கு அப்பகுதி மக்களும், விவசாயிகளும் தொடர்ந்து கடுமையான எதிர்ப்பை பதிவு செய்துவருகின்றனர், மேலும் பல்வேறு போராட்டங்களையும் முன்னேடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான் அதன் ஒரு பகுதியாக சிப்காட் விரிவாக்கத்துக்கு எதிர்ப்பு தெறித்து நொச்சிக்காடு, தியாகவல்லி கிராம மக்கள் சார்பாக எங்கள் நிலம், எங்கள் வாழ்க்கை, எங்கள் அடுத்த தலைமுறைக்காக என்றமுழக்கத்துடன்,கடலூர்சிப்காட்விரிவாக்கத்தை எதிர்த்து கிராம மக்கள் சார்பாக கண்டன பேரனை நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பங்கேற்றனர், நொச்சிகாடு கிராமத்தில் தொடங்கிய இந்த போராட்டம் வள்ளலார்நகர், நந்தன் நகர், நடுத்திட்டு, அம்பேத்கர் நகர்,பெரியார்நகர், தியாகவல்லி ஆகிய பகுதிகள் வழியாக சென்று திருச்சோபுரத்தில் நிறைவு பெற்றது.

தங்களின் வாழ்வாதார போராட்டத்தில் தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கவும், மாவட்ட ஆட்சியரின் கவனத்தை ஈர்க்கவுமே இந்த போராட்டம் நடைபெற்று வருகிறது, மேலும் நில எடுப்பு அரசனையே ரத்து செய்யும் வரையில் இந்த போராட்டம் தொடரும் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நில கையகப்படுத்தும் விவகாரத்தில் சிப்காட் கிராமத்தில் உள்ள அனைத்து கிராமத்தையும் ஒன்று சேர்த்து, மாபெரும் பெரிய போராட்டம் நடைபெறும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர், இந்த அரசாணை ரத்து செய்யும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில்

# 100 நாள் வேலை அட்டை உள்ள அனைவருக்கும் வேலை வழங்கிட வேண்டும்; சம்பளம் பாக்கி இல்லாமல் வழங்கிடவும் கைரேகை கருவிழி திட்டத்தை கைவிடக் கோரியும் சாணார்பட்டி யூனியன் ஆபீஸ் முன்பாக காத்திருப்பு போராட்டம்

100 நாள் வேலை அட்டை உள்ள அனைவருக்கும் வேலை வழங்கிட .. வேண்டும சம்பளம் பாக்கி இல்லாமல் வழங்கிடவும்.. கைரேகை கருவிழி திட்டத்தை கைவிடக் கோரியும் ..அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் சாணார்பட்டி யூனியன் ஆபீஸ் முன்பாக காத்திருப்பு போராட்டம் காத்திருப்புபோராட்டம்நடைபெற்றது...



போராட்டத்திற்கு சங்கத்தின் ஒன்றிய தலைவர் A.முருகன் தலைமை தாங்கினார்.. மாவட்ட தலைவர் K.R பாலாஜி போராட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.. சங்கத்தின் ஒன்றிய செயலாளர் M. வடிவேல் ஒன்றிய பொருளாளர் S. பாண்டி முருகன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்..

சிபிஐ( எம் )ஒன்றிய செயலாளர் S.வெள்ளைக்கண்ணன் அனைத்திந்திய ஜனநாயகமாதர்சங்கமாவட்டசெயலாளர் V.பாப்பாத்தி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில குழு உறுப்பினர் ...M.K ராஜா ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

மாவட்டச் செயலாளர் கே . அருள்செல்வன் போராட்டத்தை நிறைவு செய்து சிறப்புரையாற்றினார்

ஒன்றிய துணைச் செயலாளர் A. ஜான்பிரிட்டோ.ஒன்றிய குழு உறுப்பினர்கள் S. லெட்சுமணன்.. முருகன் ..S.சின்னையாPஅமுதா Sசங்கப்பன் சங்கர்..மாதர் சங்க ஒன்றிய செயலாளர் நாகலட்சுமி ஒன்றிய பொருளாளர் R.முத்துலட்சுமி.. கட்டுமான சங்க ஒன்றிய செயலாளர் S. பாலமுருகன் தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய தலைவர் M.செல்வம் ஒன்றிய செயலாளர் ஸ்டீபன் கஸ்பார் உள்ளிட்டோரும்பல்வேறுகிராமங்களில் இருந்து100நாள்வேலைதொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலை யாதவ குல சங்க நிர்வாகத்திற்கு இடையூறு: மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நடவடிக்கை கோரி மனு

திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு, கீழ்பென்னாத்தூர் வட்ட யாதவ குல சங்கத்தின் நிர்வாகத்திற்குஇடையூறுசெய்பவர்கள் மீதுஉரியசட்டநடவடிக்கைஎடுக்கவும், சங்கத்தின்தீர்மானப்புத்தகம்,கணக்குப் பதிவேடுகள் மற்றும் கையிருப்புப் பணத்தை மீட்டுத் தரவும் கோரி, சங்கச் செயலாளர் டி.எஸ். சங்கர், திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்துள்ளார்.



திருவூடல் தெருவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு மற்றும் கீழ்பென்னாத்தூர் வட்ட யாதவ குல சங்கம் (பதிவு எண்: 301/2010) நிர்வாகத்தில், தலைவர் ராமமூர்த்தி, செயலாளர்டி.எஸ்.சங்கர்,பொருளாளர் வி. பானு, துணைத் தலைவர் கோதண்டராமன், துணைச் செயலாளர் சின்னப்பையன் உள்ளிட்டோர் பொறுப்பு வகித்து வருவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சங்கத்தில் 24 இயக்குநர்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 27, 2026 அன்று, பொருளாளர் பொறுப்பு வகித்து வந்த துரை மற்றும் இயக்குநர் ரவி ஆகியோர் பெரும்பான்மை நிர்வாகிகளின் ஒருமித்ததீர்மானத்தின்அடிப்படையில் நிர்வாகப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து சம்பந்தப்பட்டவரிடம் நேரில்தகவல்தெரிவிக்கப்பட்டதுடன், அவரிடம் இருந்த சங்கக் கணக்குப் புத்தகங்கள் மற்றும் கையிருப்புப் பணத்தை நிர்வாகத்திடம் ஒ ப் ப டை க் கு ம ா று வலியுறுத்தப்பட்டதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரை கணக்குப் புத்தகங்களும் கையிருப்புப் பணமும் ஒப்படைக்கப்படவில்லை என்றும், சங்கத்தின் நலனுக்கு எதிராகச் செயல்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த அக்டோபர் 10ஆம்தேதிஇரவு,சங்கத்தின்தீர்மானப் புத்தகம் சிலரால் வலுக்கட்டாயமாக எடுத்துச் செல்லப்பட்டதாகவும், இதுதொடர்பாக திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 409/2026இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய தாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரமேஷ், குப்புசாமி, நாராயணன், கே. துரை, ரவி மற்றும் எஸ். துரை உள்ளிட்டோர், சங்கத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இயக்குநர்களின் முடிவின்படி, அக்டோபர் 12, 2026 அன்று நீக்கப்பட்டதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும், சங்கத்தின்தீர்மானப்புத்தகம்,கணக்குப் பதிவேடுகள் மற்றும் கையிருப்புப் பணத்தை மீட்டுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சங்கச் செயலாளர் டி.எஸ். சங்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.



திண்டுக்கல் திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் எம்எல்ஏ தலைமையில் திண்டுக்கல் மாநகராட்சியின் திமுக மாமன்ற உறுப்பினர்கள்ஆலோசனைகூட்டம் நடைபெற்றது. இதில், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி, துணை மேயர் திமுக மாநகர செயலாளர் ராஜப்பா, மாவட்ட கழக துணை செயலாளர் பிலால் உசேன், பகுதி கழகசெயலாளர்கள்சந்தோஷ்முத்து, ஜானகிராமன், ராஜேந்திரகுமார், சந்திரசேகர், சூசை ராபர்ட், பஜுலுல் ஹக், மாநகராட்சி மண்டல தலைவர்கள் ஜான் பீட்டர், ஆனந்த், கார்த்திக் மற்றும் மாநகர கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் கீழ்

# திருவண்ணாமலை மாவட்டத்தில் பயன் பெற்ற 63,734 மாணவ, மாணவிகள் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்க்கு நெஞ்சார்ந்த நன்றி

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என்பது பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்தவும், பசியின்றிக் கல்வி கற்கவும், பள்ளி வருகையை அதிகரிக்கவும் நோக்கமாகக் கொண்ட ஒரு நலத்திட்டமாகும். இத்திட்டத்தின் விரிவாக்கத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை நேரத்தில் சத்தான உணவு வழங்குவதன் வாயிலாக, அவர்களின் உடல்நலம், கற்றல் திறன் மற்றும் கல்வித் தொடர்ச்சி மேம்பட உதவுகிறது.



பெருந்தலைவர்காமராஜர்காலைஉணவுதிட்டம்விரிவாக்கம் தமிழ்நாடு முழுவதும் 22.09.2026 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படித்து வந்த மாணவர்களுடன், தற்போது 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 15.30 இலட்சம் கூடுதல் மாணவர்கள் பயன்பெறும் வகையில் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 15,454 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் இவ்விரிவாக்கத்தில் இடம்பெறுகின்றன. நடப்பு நிதியாண்டில் ரூ.217.63 கோடி கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.724 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மாணவர்களுக்கு திங்கள்கிழமையில் ரவை உப்புமா, சேமியா உப்புமா, அரிசி உப்புமா, கோதுமை ரவை உப்புமா - காய்கறி சாம்பார், செவ்வாய்கிழமை ரவை காய்கறி கிச்சடி, சேமியா காய்கறி கிச்சடி, சோளம் காய்கறி கிச்சடி, கோதுமை ரவை காய்கறி கிச்சடி, புதன்கிழமையில் ரவை பொங்கல் அல்லது வெண்பொங்கல் - காய்கறி சாம்பாருடன், வியாழகிழமையில் சேமியா உப்புமா, அரிசி உப்புமா, ரவை உப்புமாஅல்லதுகோதுமைரவைஉப்புமா-காய்கறிசாம்பார். வெள்ளிகிழமையில் சர்க்கரைப் பொங்கல், ரவை கேசரி அல்லதுசேமியாகேசரிஎனநாளென்றுக்குஒருஉணவுவகை என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கனவே ஊராட்சி பகுதிகளில் 338 பள்ளிகள் இருந்த நிலையில் புதியதாக 343 பள்ளிகள் மற்றும் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் 20 பள்ளிகள் இருந்த நிலையில் புதியாக 19 பள்ளிகள் என 39 பள்ளிகளை சேர்த்து மொத்தம் 720 பள்ளிகளில் 63734 மாணவ, மாணவிகள் காலை உணவு திட்ட விரிவாக்கத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாணவன் மேகநாதன் தெரிவித்ததாவது:

என் பெயர் மேகநாதன். நான் திருவண்ணாமலை மாநகராட்சியிலுள்ள வேங்கிக்கால் ஜெய்பீம் நகரில் வசித்து வருகிறேன். நான் வேங்கிக்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனது தந்தை புகைப்படகலைஞராகபணியாற்றிவருகிறார். பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் தினமும் காலையில்பள்ளியில்சுவையான உணவுவழங்கப்படுகிறது. இத்திட்டத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாணவன் புகழ் தெரிவித்ததாவது:

என் பெயர் புகழ். நான் திருவண்ணாமலை மாநகராட்சியிலுள்ள வேங்கிக்கால் ஜெய்பீம் நகரில் வசித்து வருகிறேன். நான் வேங்கிக்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனது தந்தை பெயர் திரு.அருள் குமார். அவர் கூலி வேலை செய்கின்றார். பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம்செய்ததன் மூலம் தினமும் காலையில் பள்ளிக்கு சென்று உணவு சாப்பிட்டு நன்றாக கல்வி கற்க முடிகிறது.



பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை விரிக்காம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாணவன் கோபிகா தெரிவித்ததாவது:

எனது பெயர் கோபிகா. நான் திருவண்ணாமலை மாநகராட்சியிலுள்ள வேங்கிக்கால் ஜெய்பீம் நகரில் வசித்து வருகிறேன். நான் வேங்கிக்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனது தந்தை பெயர்கிருஷ்ணமூர்த்தி, அவர்கூலிவேலைசெய்துவருகிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்ததன் மூலம் தினமும் காலையில் பள்ளியில் உணவு வழங்கப்படுகிறது. இதனால் கல்வி கற்க மிகவும் உதவியாக உள்ளது. இத்திட்டத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தி வெளியீடு:

**B சுருளி பிரபு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

# சடையன்குப்பத்தில் ரூ. 2 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டலம் 16வது வார்டு மாதவரம் தொகுதி சடையன்குப்பம் சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூபாய் 2 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா பள்ளி தலைமையாசிரியர்(பொறுப்பு) எஸ். தேவகிருபை தலைமையில் நடைபெற்றது.





மாதவரம்சட்டமன்றஉறுப்பினரும்தவெகதிருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு, மணலி மண்டலக் குழுத் தலைவரும் திருவொற்றியூர் மத்திய பகுதி திமுக செயலாளருமான ஏ.வி. ஆறுமுகம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு புதிய வகுப்பறைகளை மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினர்.

முன்னதாக மாவட்ட வருவாய் அலுவலரும் மண்டல அலுவலருமான பி.அரவிந்தன், மண்டலம் 2 செயற் பொறியாளர் கே.தேவேந்திரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி 16வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர் நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் உதவி கல்வி அலுவலர் சுஜாதா, உதவி செயற்பொறியாளர்கள் தினேஷ்பாபு, மைதிலி, உதவி பொறியாளர்தனசேகரன், தவெக மாதவரம் பகுதி செயலாளர் கார்த்திக், தியாகு உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள், மாணவமாணவிகள், பெற்றோர்கள், தவெககட்சிநிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், சேலை ஊராட்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கவிதா குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, பொதுமக்களுக்குதிட்டங்கள்தொடர்பாகவிழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடினார்.





மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், திருவள்ளூர் சார் ஆட்சியர் மரு.எஸ்.பிரசாந்த், இணை இயக்குநர் (வேளாண்மை) செல்வராஜ், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேசன், துணை இயக்குநர் (தோட்டக்கலை (ம) மலை பயிர்கள்) குமரவேல், திருவள்ளூர் வட்டாட்சியர் வெ.சரண்யா, தனி வட்டாட்சியர்(ச.பா.தி) சசிகலா, வருவாய்துறை மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# "சின்னமனூர் அண்ணாமலை நகர் சாலையில் மாதக்கணக்கில் குவிந்து கிடக்கும் மணல், கற்கள்" வாகன ஓட்டிகள் அவதி!

தேனி மாவட்டம் சின்னமனூர் பிரதான சாலை அருகே உள்ள அண்ணாமலை நகர் பகுதிக்கு செல்லும் பாதையில், கட்டிட பணிகளுக்காக கொட்டப்பட்ட மணலும் கற்களும் மாதக்கணக்கில் அப்புறப்படுத்தப்படாமல் கிடப்பதால், வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.



கட்டிடம் இடிக்கப்பட்டு பணிகள் முடிந்த பின்னரும் இவை அகற்றப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். சாலையை அடைத்து கிடக்கும் இந்த குவியல்களால், அந்த வழியாகச் செல்ல வேண்டிய பள்ளி வாகனங்கள் சென்று வர முடியவில்லை. இதனால் பள்ளிக் குழந்தைகள் பெரும் சிரமப்படுகின்றனர். அரசு அதிகாரிகள், அலுவலர்கள் பலர் வசிக்கும் பகுதி என்பதால், அலுவலக நேரத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

தெருவின் நுழைவாயிலிலிருந்து எந்த திசையிலும் வெளியேற முடியாத நிலை உள்ளதாகவும், இதனால் அண்ணாமலை நகர் பகுதி மக்கள் அனைவரும் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். கட்டுமானபணிகள்முடிந்தபின்மணல், கற்களைஅப்புறப்படுத்த வேண்டியபொறுப்புகட்டிட உரிமையாளர் அல்லது கட்டுமானம் மேற்கொண்டவருக்கு உண்டு என்பதால், அவர்கள் உடனடியாக அவற்றை அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர். அவ்வாறு அகற்றாவிட்டால், சின்னமனூர் நகராட்சி நிர்வாகம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து சாலையை போக்குவரத்துக்கு திறந்துவிட வேண்டுமென்று இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாதவரம் தொகுதி சடையான் குப்பம் ரேஷன் கடையில் எம்.எல். விஜய் பிரபு எம்எல்ஏ திடீர் ஆய்வு

மாதவரம் தொகுதி பெருநகர சென்னை மாநகராட்சி 16வது வார்டுக்குட்பட்ட சடையன்குப்பம் நியாய விலைக் கடையில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம். எல். விஜய் பிரபு திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்பொழுது, விற்பனையாளரிடம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொருள்கள் எடை சரியாக நிறுக்கப்படுகின்றதா? அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை, பாமாயில் போன்ற பொருள்கள் தரமாக உள்ளதா என்று கேட்டறிந்ததோடு, அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகளையும் ஆய்வு செய்தார்.





பொதுமக்களிடையே உரையாடும் பொழுது, அரிசி, பருப்பு, சர்க்கரை, கோதுமை, பாமாயில் சரியான அளவு வழங்கப்படு கின்றதா? அரசு வழங்கும் பொருள்களில் ஏதாவது குறைபாடுகள் உள்ளனவா? உள்ளிட்ட விஷயங்களை கேட்டறிந்தார். இதில் தவெக மாதவரம் பகுதி செயலாளர் கார்த்திக், சடையன்குப்பம் நிர்வாகி தியாகு உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# மேலமேடு கன்னிகாபுரத்தில் ஸ்ரீ ஹரிஹரசுதன் ஐயப்ப ஆலய அஷ்டபந்தன கும்பாபிஷேக விழா

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அடுத்த மேலமேடு கன்னிகாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரசுதன் ஐயப்பன் ஆலய நூதன அஷ்டபந்தன கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக பாமகவைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் தெற்கு ஒன்றிய செயலாளர் ரவி கலந்து கொண்டு சிறப்பித்தார். இதையொட்டி, கோயிலில் யாகசாலை பூஜைகள், ஸ்ரீகணபதிஹோமம், ஸ்ரீ லட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம் உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து, வேத மந்திரங்கள் முழங்க, புனித நீர் கோபுர கலசங்களின் மீது ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர், மூலவருக்கு சிறப்பு அபிஷேக, அலங்காரங்கள் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீ கன்னிமூல கணபதி, ஸ்ரீ பாலமுருகர் ஆகிய தெய்வங்களுக்கு புனிதநீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகா விழா நடைபெற்று. விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவிற்கானஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் மற்றும் விழாக்குழுவினர் செய்திருந்தனர்





# செங்குன்றம் ஸ்ரீஅங்காளம்மன் திருக்கோயிலில் 3ஆம் நாள் நவராத்திரி திருவிழா

செங்குன்றம் மேட்டுத்தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோயிலில் மூன்றாம் நாள்நவராத்திரிதிருவிழாவும் அதனைத் தொடர்ந்து 10 ஆம் நாள் 18ஆம் ஆண்டு மஹா சண்டி ஹோமம் நிகழ்ச்சியும் ஆலய நிர்வாகிகள், கிராம பொதுமக்கள், ஆலய மகளிர் குழுவினர்கள் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.



நவராத்திரி பூஜையின் மூன்றாம் நாள் மீனாட்சி அம்மன் திருவுருவ அலங்காரம் செய்யப்பட்டு, பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து, வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு. மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டு சிறப்பு பூஜைகளும் நடைபெற்றன.

மூன்றாம் நாள் உபயதாரர்களான M. மதனா ராணியம்மாள், A, விஜயன் தாட்சியாயினி, T. பன்னீர்செல்வம் சாந்தி, A. ராஜா கீதா, M. சிவகுமார் கவிதா ஆகிய குடும்பத்தினரின் சார்பில் மூன்றாம் நாள் நவராத்திரி திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

உபயதாரர்களுக்கு ஆலய நிர்வாகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் செங்குன்றம் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஆலயம் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA